# தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2020 கடகம் (15-7-1989) ஓர் உருபா (இதழ் எண்: 125)


# -புலிகளுக்குப் பொதுமக்களிடம் உள்ள ஆதரவைக் குறைக்கவும், -அமைதிப் படையின் நிலைப்பாட்டை ஞாயப்படுத்தவும், -தம் ஆட்சி அதிகார வரம்பை விரிவு படுத்தும் முயற்சியை உலக நாடுகளை ஏற்கச் செய்யவும், ஒற்றர் படைகளைக் கொண்டு இராசீவ் செய்த சூழ்ச்சியே, தமிழீழத் தலைவர்களின் படுகொலைகள்!

அரசியல் பின்னணிகளைச் சுட்டிப் பாவலரேறுவின் கருத்துரை!

'இந்தியப்படை வெளியேறினால் புலிகளால் மக்கள் உயிர்க்கு ஏதும் (ஆபத்து) ஏற்படும்' என்று, இந்திய அரசும், அங்குள்ள மற்ற போராளிக் குழுக்களும் அடுத்தடுத்து மக்களிடம் கூறி வருகின்றன. இதைப் புலிகள் அறவே மறுத்து, 'இந்தியப்படை வெளியேறினால், புலிகளால் மற்ற தமிழ்க் குழுக்களுக்கும், பொது மக்களுக்கும் எந்த வகையான ஏதமும் (ஆபத்தும்) உயிர்ச்சேதமும் இருக்கா' என்று கூறி வந்தனர்; வருகின்றனர்.

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

# உங்கள் மடல்கள்!

## இரட்டை 'வேடமா?'

அன்புடையீர், வணக்கம். தமிழ்நிலம் 15-6-1989 இதழ் எண் 123 தொடர் 6 குடமுருட்டியிலிருந்து கொடைக்கானல் வரை- இந்தக் கட்டுரையின் ஆசிரியரின் கருத்தும், தங்கள் கருத்தும் ஒன்ரு?

தமிழ்நாடு விடுதலைப் படையின் அணுகுமுறை தவருனது என்ருல், இதற்குத் தாங்கள் முழுப் பொறுப்பும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதையும் வெளியிடவேண்டும். இதில் தங்கள் பங்கு அதிகம் என்பது எனக்குத் தெரியும். அரியலூர், பொன்பரப்பி, கொடைக்கானல் போன்ற இடங்களில் உழைக்கும் மக்களின் உயிர்களைக்காவு கொண்டது என்பது உண்மைக்குப் புறம்பானது. இக்கட்டுரையின் ஆசிரியர் தோழர் அமிழ்தன் அவர்களுக்கு இந்நிகழ்ச்சிகள் குறித்து முழுமையாக ஏதும் தெரியாது என்னும் நிலை இக்கட்டுரை எழுதியதிலிருந்து தெரிகிறது. தோழர் தமிழரசன் ஒரு தலைசிறந்த "மனிதாபிமானி". அந்த மனிதாபிமான செயலால்தான் அவர் உயிரையும் உடன் தோழர்களின் உயிரையும் இழக்க நேரிட்டது.

தமிழ்நாட்டின் விடுதலைக்காக முதன் முதலில் தன்னுடைய உயிரை இழந்த தோழர் தமிழரசனைக் கொச்சைப்படுத்துவது—இதை இரண்டகமாகக் கருதுகின்றேன்.

அடுத்து, கட்டுரை முடியும் பக்கத்தில் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் உள்ள தமிழ் நாட்டுப் போராளிகள் என்ற தலைப்பில் தோழர்களைக் குறிப்பிடுவது ஏன் என்றும் புரியவில்லை. இ'து இரட்டை 'வேடம்' என்று கருதுவதற்கு இடம் கொடுக்கின்றது. அல்லது தோழர்களைக் குற்றவாளிகள்தாம் என்று காட்டிக் கொடுக்கப்படுகின்றதா என்றும் புரியவில்லை.

இக்கட்டுரை பார்ப்பன இதழ்கள், காவல்துறை அறிக்கைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, யாரையோ காப்பாற்ற எழுதப்பட்டதாகத் தெரிகின்றது.

அரியலூர் வழக்கில் காவல்துறையினர்கூட தெரிந்தோ தெரியாமலோ தோழர் தமிழரசன் ஒரு சிறந்த 'மனிதாபிமானி' என்ற வகையில்தான் அறமன்றத்தில் அறிக்கை அளித்துள்ளார்கள்.

உண்மையிலேயே கட்டுரை ஆசிரியர் உண்மையான ஆய்வு அறிக்கையை மக்களுக்கு அளிக்கவேண்டும். விரும்பினுல் என்னையும் வழக்கறிஞர் இராமதாசு அவர்களையும் அணுகினுல், விளக்கம் கொடுக்கமுடியும். காரணம் அவ்வழக்குகளை நாங்கள்தான் நடத்தினோம்; நடத்திக் கொண்டிருக்கின்ருேம். மீண்டும் நன்றி, வணக்கம். அடுத்த இதழில் தங்கள் விடைஎதிர்பார்க்கின்ருேம்.

—இ. இராசமாணிக்கம், மயிலாடுதுறை.

## நீண்டநெடிய வாழுள் பெற்று...!

அன்புடையீர்!

வணக்கம். தாங்கள் சென்ற மாதம் உந்து வண்டியில் ஏறுகையில் விழுந்துவிட்டசெய்தியைத் 'தமிழ்நிலம்' இதழில் போராளி பொழிலன் கடிதம் கண்டு வருந்தினேன். தாங்கள் நீண்ட நெடிய வாழ்நாள் பெற்றுத் தமிழ்மொழிக்குத் தொண்டாற்றவேண்டும். தமிழின மக்கள் தங்களிடம் மிகவும் எதிர்பார்க்கின்ருர்கள். பல்லாண்டு பல்லாண்டு வாழ்க! வாழ்க! என வாழ்த்தும் அன்பன்.

—நா. அன்புச்செல்வன், திருப்பராய்த்துறை.

## கருவிப்போரா? கருத்துப்போரா?

மதிப்புயர் ஐயா,

வணக்கம், தமிழ்நிலம் இதழில் (இதழ் எண். 121-இல்) சென்னை இரண்டிலிருந்து திரு. ந. அ. நவநீதன் அவர்களின் மடலைப் படித்தேன். 'கருவிப் போரா? கருத்துப் போரா?—என்று தலைப்பிட்டு வெளியிடப் பெற்ற அவரின் கருத்துகள் அனைத்தும் சிந்திக்கப் பெறவேண்டிய கருத்துகளாகும். அதற்கான ஒரு சிறு விளக்க மடலாக இதனைத் தங்களுக்கு எழுதியுள்ளேன்.

எந்த ஒரு மாந்த விடுதலைப் புரட்சிக்கும் இரண்டு கூறுகள் உண்டு. ஒன்று கருத்துப் போர், இரண்டு கருவிப் போர். கருத்துப் போரும், கருவிப் போரும் ஒன்றுக்கொன்று இணையாக நடைபெற வேண்டிய செயல்களாகும். வெறுமனே கருத்துப் பரப்பல் செய்தாலும் புரட்சி வராது. கருத்துப் பரப்புதல் எந்த அளவுக்கு விரிவுபடுத்தப் பெறுகிறதோ அந்த அளவுக்குக் கருவிப் போரும் விரிவுபடுத்தப் பெற்ருலே புரட்சி வெற்றி பெறும். இந்த இரண்டு வகைப் போருக்கும் முதன்மைத் தேவை என்பது சரியான கொள்கையும், அக்கொள்கையைச் செயல்படுத்த சரியான திட்டமும் ஆகும்.

தமிழகத்தைப் பொறுத்த அளவில்—கருத்துப் போர் என்பது சற்று ஏறக்குறைய நாற்பது ஆண்டுக் காலமாகத் திராவிட நாட்டுக் கோரிக்கை என்றும், தனித் தமிழ்நாட்டுக் கோரிக்கை என்றும் வைக்கப்பட்டு, இன்று மார்க்சிய—இலெனினிய—மாவோவிய கோட்பாட்டின் அடிப்படையில் தமிழ்த்தேசிய இனவிடுதலையாக சரியான கொள்கையோடும், திட்டத்தோடும் வைக்கப்பட்டுள்ளது. அதற்கான கருத்துப் பரப்பல் முயற்சியும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுள்ளது.

கருவிப் போர் என்பது கடந்த சில ஆண்டுகளாக, ஒரு தொடக்கக்கால முயற்சியாக,

(12-ஆம் பக்கத் தொடர்ச்சி)

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிலையில், இந்தியப் படைகளை வெளியேறக் கோரும் புலிகள், தங்கள் மேல் மக்கள் வைத்த நம்பிக்கை வலுப்பட நடந்து கொள்வார்களே தவிர, அந்நம்பிக்கை குலையுமாறு புலிகள் மட்டுமல்லர், அரச தந்திரமும் போராட்ட அறிவும் மிக்க வேறு எவருமே இத்தகைய அழிவு வேலைகளில் ஈடுபட மாட்டார்கள். வெண்ணெய் திரண்டு வரும் நேரத்தில் தாழியை உடைக்கக் கூடாது என்பது அவர்களுக்குத் தெரியாத அறிவுக்கூறு (விவேகம்) அன்று: புலிகள் அவ்வளவு முட்டாள்களும் அல்ல. 'தினமணி'கள் கூறுவது போல, அவர்களுடைய எதிர்காலத்தை அவர்களே இத்தகைய செயலில் ஈடுபட்டுப் பாழடித்துக் கொண்டு விட்டார்கள் என்பது, அவர்களின் அரச தந்திரத்தையும் ஆற்றலையும் வேண்டுமென்றே குறைத்து மதிப்பிட்டுக் காட்டுவதாகும்!

இந்தியப் படைகள் வெளியேறக் கூடாது என்பதற்காகப் பொய்யாகவும் புனைசாக்காகவும் பலவேறு காரணங்களை, இந்திய அரசும் அங்குள்ள இரண்டகப் போராளிக் குழுக்களும் இட்டுக் கட்டிக் கூறிவரும் இந்த நேரத்தில், வெறும் வாயை மென்று கொண்டிருக்கும் அவர்களுக்கு நல்ல அவலை இடித்துக் கொடுத்தது போலும் செயல்களில் ஈடுபட மாட்டார்கள். அவ்வாறு ஈடுபட்டுத் தங்கள் அரசியல் வாய்ப்புகளைக் கெடுத்துக் கொள்ளும் அளவுக்கு அவர்கள் உலக அறிவுக் குறைவானவர்கள் அல்லர்.

தமிழீழ விடுதலைப் புலிகளும் இலங்கை அதிபர் பிரேமதாசாவும் பேச்சு நடத்துவது இந்தியாவுக்கு எதிரானது என்பது இராசீவின் கருத்தாகும். அதே சமையத்தில், பிரேமதாசா வரும் சூலை 29-க்குள் இந்திய அமைதிப் படையை வெளியேறச் சொன்னது, தம் தன்மானத்திற்கும், உலக அரங்கில் தமக்குள்ள பெருமைக்கும் இழுக்காகும் என்பதும், தாம் இலங்கைத் தமிழர் சார்பாக ஆனால் மிகச் சூழ்ச்சியாக எடுத்த மறைமுக அதிகார விரிவுபடுத்தத்திற்கு, வெளிப்படையாகக் கிடைத்த படுதோல்வி என்பதும் இராசீவின் கருத்துகள்!

எனவே, எந்த முயற்சியைச் செய்தாவது, இவ்வரசியல் சரிவுகளைச் சரிகட்ட அவர் நினைத்தார். வேறு எந்த வழியும் அவருக்குப் புலப்படாத நிலையில், தம் ஒற்றுப்படைகள் (RAW) மூலம் தமிழீழத் தலைவர்களைத் தீர்த்துக் கட்டுவது என்றும், அப்பழிகளை இடைவிடாத விளம்பரக் கருவிகளின் மூலம், புலிகளின் மேல் போட்டு விடுவது என்றும், திட்டமிட்டார்.

இதன் விளைவாக மூன்று ஆக்கமான பயன்களை-ஒரே கல்லில் மூன்று மாங்காய்களை வீழ்த்திவிட முடியும் என்பதும் அவர் நோக்கம்!

ஒன்று, தமிழீழத்தில் உள்ள தமிழ் மக்களிடத்தில், புலிகளுக்கிருக்கும் ஆதரவைக் குறையச் செய்வதும், அவர்களுக்குப் புலிகளின் மேல் ஒரு வெறுப்பை உண்டாக்குவதும்;

இரண்டு, இந்திய அமைதிப்படை இலங்கையிலிருந்து வெளியேறினால், அங்குள்ள மக்களுக்கு ஏதமும் (ஆபத்தும்) அழிவும் நேரும் என்று இந்தியா ஓயாமல் ஒழியாமல் செய்யும் பொய்க் கருத்துப் பரப்பலை மெய்யாக்கி, அமைதிப் படை அங்கிருப்பதை ஞாயப்படுத்தி விடுவதும்;

மூன்று, தமிழர் தலைவர்களை அழித்தொழிப்பதன் மூலம், தமிழினத்தின் வலிவைக் குறைப்பதும், அதனால் தனி நாட்டுக் கொள்கையைக் கைவிடும்படி செய்வதும்—ஆகும்!

மேலும், இவ்வளவு காலமாகத் தலைவர்கள் அழிக்கப்படாமல், இக்கால் நடந்த கொலைகளும், பிரேமதாசா வைத்த கெடுவைப் பொருளற்றதாகச் செய்யும் நோக்கத்தில் இதுவரை இலங்கையரசு இக்கொலைகளைப் பற்றிய அறிக்கை வராத நிலையில் இந்திய அரசே இவை விடுதலைப் புலிகளால் நேர்ந்தவை என்று கூறுவதும், கொலை செய்ததாகக் கருதப்படும் மூன்று இளைஞர்களில் (விசு, அலோசிசு, விக்னேசு) இருவர் கொலை நடந்த இடத்திலும், ஒருவர் பின்னரும் சுடப்பட்டுக் கொல்லப்பட்ட செயல்களும், தலைவர்கள் மூவரில் தப்பித்த ஒருவரான சிவசிதம்பரத்தின் வாய்மூலம் எதையும் இதுவரை வெளிப்படுத்தாத கமுக்க நிலையும், இப்படுகொலைகள் புலிகளால் இன்றி, இந்திய உளவுப் படையால்தான் நேர்ந்திருக்கவேண்டும் என்னும் ஐயத்தை உறுதிப்படுத்துகின்றன. அடுத்து நடந்த உமாமகேசுவரன் (முகுந்தன்) கொலையோ அதை மேலும் வெளிப்படையாகவே உறுதிப்படுத்துகிறது.

எனவே, இச்சூழ்ச்சிகளையெல்லாம் நன்கு விளங்கிக் கொண்டு, தமிழீழ விடுதலைப் புலிகள் மேலும், அவர்கள் அங்குள்ள தமிழினத்தின் விடிவுக்காகவும், உலகத் தமிழினத்தின் எதிர்கால நலனுக்காகவும் எடுக்கின்ற எத்தனை நடவடிக்கைகளானாலும் அவற்றின் மேலும் நம்பிக்கை வைத்து-இங்குள்ள தமிழர்கள் தொடர்ந்து, இத்தமிழின விடுதலை மேம்பாட்டு முயற்சிகளில் தொய்வின்றி ஈடுபடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்!

இந்திய அரசு கூறுவதெல்லாம் பொய்யே! பொய் தவிர வேறில்லை; இராசீவ் தமிழினத்தின் மாபெரும் எதிரி! அவரிடத்தில் ஓர் இம்மியும் தமிழினத்துக்கான நலனை எதிர்பார்ப்பதில் ஒருசிறு நன்மையும் இல்லை. வாழ்க தமிழினம்! வளர்க அவர்தம் உரிமைக்கான போராட்ட முயற்சிகள்! தனித் தமிழீழம் கண்டே தீருவோம்! தனித்தமிழ் நாடு பெற்றே தீருவோம்! O

Scanned with CamScanner

# தமிழக விடுதலைப் போராட்டச் செய்திகள்!

## தமிழ்நாடு விடுதலைப் போராளி இளங்கோ தேசியப் பாதுகாப்புச் சட்டத்திலிருந்து விடுவிக்கப் பெற்று வெளியே வந்தார்! சிறையிலுள்ள பொழிலன், முகிலன், நாராயணன், சுப்பிரமணியன், பாண்டியன் ஐவரும் ஆகத்து, அக்டோபர் மாதங்களில் வெளியே வரவிருக்கின்றனர்!

*மதுரை: 27 சூன்:* கடந்த ஏப்பிரல் மாதம் தமிழகத்தில், சென்னை, கத்திபாரா நேரு சிலை குண்டு வெடிப்பிலும், கொடைக்கானல் தொலைக் காட்சி நிலையக் குண்டு வெடிப்பிலும்; பின்னர், கோவைக்கு இராசீவ் வரவிருந்த பொழுது, அங்குள்ள நேரு விளையாட்டரங்கத்திலும், பின்னர் உதக மண்டலத்திலும் நடந்த குண்டு வெடிப்புகளிலும், தமிழ்நாடு விடுதலைப் படையையும், பல்லடம் திருக்குறள் கழகத்தையும் சேர்ந்த 23 பேர் சிறைப் படுத்தப் பெற்றது அனைவரும் அறிந்ததே!

திருச்சி, வானொலி நிலையச் செய்தி வாசிப்பவர் இராவணன் என்னும் தென்னவன்கோ, திருச்சி மிகுமின் நிலயத்தைச் (B.H.E.L.) சேர்ந்த குழந்தை ஈகவரசன், மயிலாடுதுறை இளமுருகன், கோவை வீரமணி, சென்னை, இளமாறன், குணத்தொகையன், தெய்வமணி, குண்டலகேசி, காஞ்சிபுரம் பவணந்தி, நெமலி தமிழ் இனியன், புதுவை சுகுமாறன், பல்லடம் கரிகாலன், ந. முத்துக்குமரன், மா. ஆறுமுகம், சீனி. செந்தேவன். ஈசுவர மூர்த்தி, வள்ளுவராசன், தஞ்சை வியனரசு, பாண்டியன், நாராயணன், சுப்பிரமணியன், இளங்கோ, பொழிலன் ஆகியோர் இக் குண்டு வெடிப்புகள் தொடர்பாகப் பல நாள்களில் பல இடங்களில் சிறைப் பிடிக்கப் பெற்றனர்.

இவர்களுள் பொழிலன், முகிலன், இளங்கோ, பாண்டியன், சுப்பிரமணியன், நாராயணன் அறுவரும் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில், முதல் மூவரும் மதுரை நடுவண் சிறையிலும், பின் மூவர் கோவை நடுவண் சிறையிலும் சிறை வைக்கப் பெற்றனர். மற்ற 17 பேரும், மூன்று மாத எல்லைக்குள் காவல் துறையினர் குற்ற அறிக்கை தராமையால் அறமன்ற நடுவர்களால் கடந்த செப்டம்பர் மாதத்தில் அவரவர் பொறுப்பில் சில கட்டுப்பாடுகளுடன் வெளியில் விடப் பெற்றனர்.

தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிறை வைக்கப் பெற்றோர் குறைந்தது ஓராண்டுக் காலம் உள்ளே இருக்க வேண்டும்.

அதன்படி இளங்கோ என்னும் போராளிக்குக் கடந்த 27-6-89 அன்று ஓராண்டுச் சிறை முடிந்தது. எனவே அவர் கடந்த 28-6-89 அன்று மதுரைச் சிறையிலிருந்து அறமன்றத்தால் தம் பொறுப்பில் விடுவிக்கப் பெற்றும் பிறர் போல் சில கட்டுப் பாடுகளின் அடிப்படையில் வெளியே வந்துள்ளார்.

இளங்கோவுடன் மதுரை நடுவண் சிறையில் உள்ள பொழிலனுக்கும், முகிலனுக்கும் வரும் 31-8-89-உடன் ஓராண்டுச் சிறையிருப்பு முடிவடைகிறது. அவர்களும் சில கட்டுப்பாடுகளுடன், அன்றோ மறு நாளோ விடுதலை செய்யப் படலாம். (இவ்வோராண்டுக்காலத்தில் ஆசிரியர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் தம் மகன் பொழிலனையோ பிறரையோ சிறையில் சென்று பார்க்கவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. இதற்குக் காரணம் பெருஞ்சித்திரனார் அவர்களின் தூண்டுதலின் பேரில்தான் அவர்கள் அனைவரும் மேற்கண்ட குண்டு வெடிப்புச் செயலில் ஈடுபட்டார்கள் என்று காவல் துறையின் குற்றச் சாட்டு உள்ளது. போராளிகளை ஆசிரியர் பார்ப்பதனால், அவர்களுக்கு வேறு ஏதாவது புதுத் தொல்லைகள், புதுக் குற்றச்சாட்டுகள் வந்து விடக் கூடாது என்பதொன்று, அடுத்து ஆசிரியர் தம் மகன் என்ற முறையிலும் பொழிலனைப் போய்ப் பார்க்காமல் இருந்தது, போராளிகள் பிறரைப் போய்ப் பார்க்காத பொழுது அவரை மட்டும் எவ்வாறு பார்ப்பது என்பது இரண்டாவது)

எனவே, அடுத்து வரும் 31-8-89 அன்று மதுரைச் சிறையிலிருந்து தேசியப் பாதுகாப்புத் தடைச் சட்டக் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப் பெற்று வரும் போராளிகள் பொழிலனையும், முகிலனையும் ஆசிரியர் நேரே சென்று வரவேற்பார். அக்கால் ஆசிரியருடன் சென்று போராளிகளை வரவேற்க விரும்புவார் வரலாம் என்று கேட்டுக் கொள்ளப் படுகிறது.

அடுத்துக் கோவைச் சிறையில்; தேசியப் பாதுகாப்புச் சட்டப்படி சிறை வைக்கப் பெற்றிருக்கும் பாண்டியன், சுப்பிரமணியன், நாராயணன் மூவருக்கும் வரும் அக்டோபர் மாத இடையில் ஓராண்டுக் காலம் முடிவுறுகிறது. அவர்களையும் ஆசிரியர் சென்று வரவேற்று அழைத்து வருவார்.

தேசியப் பாதுகாப்புச் சட்டப் படி ஓராண்டுச் சிறையிருந்த போராளிகளுக்கும் சரி, முன்னரே கட்டுப் பாட்டின் கீழ் தம தம் பொறுப்புகளில் விடுவிக்கப் பெற்ற போராளிகளுக்கும் சரி இன்னும் வழக்குகள் போடப் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவர்களில், திருச்சி குழந்தை ஈகவரசன் ஒருவரே தம் பணியினின்று அவர் அலுவலகத்தால் விலக்கப் பெற்றுள்ளார். பிற

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

(தொடர்: 8)

(முன் இதழ்த் தொடர்ச்சி)

# குடமுருட்டியிலிருந்து கொடைக்கானல் வரை..!

## தமிழ்நாடு விடுதலைப் படைகளும் இந்தி(ய)ப் பாசிசக் கும்பல்களும்!

- செ. அமிழ்தன் -

***தமிழ் நாடு விடுதலைப் படையின் இப்போக்கினால் நடந்துள்ள விளைவுகள்தாம் என்ன?***

பாசிச வல்லாளுமை ஆட்சி நடைபெறும் எந்த நாட்டிலும் எழும் எந்தவொரு போராட்டத்திலும் முதலில் வெற்றி பெறுவது அவ்வாட்சியை நடத்தும் ஆளும் வகுப்பினராகவே-ஆட்சியாளர்களாகவே இருக்க முடியும். ஏனெனில் அவர்களிடம் வலிமையான சிறைக் கூடங்களும். திறமையான கூலிப்படைகளும் எப்பொழுதும் இருக்கும். அவற்றைக் கொண்டு பாசிசர்கள் (Fascists) பொது மக்களை- ஒன்றுமறியா மக்களைக் கொன்று குவித்தும், போராட்ட வீரர்களைச் சிறையில் அடைத்தும், பொது உணர்வு கொண்டவர்கள்மீது பொய் வழக்குகளைத் தொடுத்தும் தங்களுடைய கொலை வெறியை நிலைநாட்டவே செய்வர். (இவ்வாறு அவர்கள் பெறும் வெற்றி நிலையான வெற்றியாக இருக்காது; வெற்றி போல் தோற்றமளிக்கவே செய்யும். மக்களுடைய போராட்டம் அதன் பாய்ச்சல் நிலையை எட்டும் போது இந்தக் கொலை வெறியர்களின் வலிமையான சிறைக்கூடங்கள் வாய் பிளந்து கொள்ளும். அப்பொழுது கூலிக்கு இருந்த கொலை வெறிப் படைகளும் சிதறி ஓடி ஒளியும். இது மக்கள் பெறும் வெற்றியாக இருக்கும்.)

அத்தகைய கொடுமைகளே இன்று தமிழகத்தில் நடந்து கொண்டு வருகின்றன. இதுவரை ஏறத்தாழ 350 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் பொய் வழக்குகளில் சிக்க வைக்கப்பட்டுள்ளனர். புரட்சி அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் பலர் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். அது மட்டுமல்லாமல், பல இடங்களில் காவல் துறையினரால் ஏழைப் பொது மக்களின் வாழ்வுரிமைகள் பறித்தெடுக்கப்பட்டு உள்ளன. இவை இன்றும் தொடர்ந்த வண்ணமே உள்ளன; இனியும் தொடரும்.

ஏனெனில் அரத்தப் போர் வெறி கொண்ட இந்தி(ய) பாசிசக் கும்பலின் தலைமைப் பீடமாகிய தில்லி தனது அரத்த வெறி நாக்கைத் தமிழகத்திற்துள் நுழைத்து அரத்தம் குடிப்பதென முடிவு செய்து விட்டது. அதற்கான வெளிப்படையான அறிவிப்பே அண்மையில் 15-06-1988 அன்று வெளியான **"ஜூனியர் விகடன்"** எனும் தமிழக அரசியல் மஞ்சள் தாளிகையில் **"வெடிகுண்டு சம்பவங்கள் தொடருமா?** என்னும் வினாத்தலைப்பிலான ஒரு கட்டுரையாக வெளிவந்துள்ளது. அந்தக் கட்டுரையை "ஜூனியர் விகடன்" தனது வழக்கமான "பூச்சுற்றல்" பாணியிலேயே எழுதி மறைமுகமாகத் தில்லியரசின் விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளது. இது அந்த தாளிகை மக்களுக்கு செய்யும் நற்பணியன்று; மாறாகத் தில்லியரசின் விருப்பத்திற்கு அது அளிக்கும் ஏற்பும், நடைபெறப் போகும் செயல்களுக்குப் பச்சைக் கம்பளம் விரித்து அளிக்கும் வரவேற்புமாகும்.

இதன் மூலம் ***இந்தி(ய)த் தில்லி வல்லரசு தனது வல்லாளுமை வெறியினால் வலியத் தானே ஓர் அச்சநிலைத் "தனித் தமிழ் நாடு" போராட்டத்தை உருவாக்க முடிவெடுத்து விட்டது. அதற்கான பணிகளைத் தற்போது தில்லியின் உளவுப் படையாகிய 'ரா' (RAW) மேற்கொண்டுள்ளது. எனவே தமிழகத்தில் இனி திட்டமிட்ட வன்முறைகளும், குண்டு வெடிப்புகளும், கொள்ளைகளும் அவ்வப் போது தொடரவே செய்யும்.*** அவற்றில் தில்லியின் அருளாண்மையோடு போர்க்கருவிகளும் தலை காட்டவே செய்யும். இத்தகைய செயல்களுக்காகத் தில்லியின் உளவுப்படை உதிரிகளை (Lumpen)யும், வன்முறைக் கும்பல்களையும் விலை பேசும்; அத்துடன் நில்லாது அரசியல் வன்முறைக் குழப்பங்களைத் தூண்டுவதற்காக அரசியல் கட்சிகளை உடைத்தெறியவும், அரசியலாளர்களை விலை பேசவும் செய்யும். இதனால் திட்டமிட்ட அரசியல் கலவரங்களும், வன்முறைகளும் பெருகும். அவற்றைக் கட்டுப் படுத்துவது எனும் பெயரில் அரசு வன்முறையும், கொடுஞ்செயல்களும் மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டுத் திணிக்கப்படும். இதன் மூலம் தமிழகம் இந்தி(ய) அரசுப் படைகளின் வேட்டைக்காடாகும். ஏனெனில் பாசிசர்கள் (Fascists) என்னும் கொடுநிலைக் கொள்ளியைத் தூக்கி பிடித்துக் கொண்டு தங்களுடைய பதவிகளைக் காத்துக் கொள்ளத் தயங்குவது இல்லை.

(ஆனால் இவர்கள் வளர்த்து விடும் இக் கொடு நிலைகள் மெல்ல மெல்ல வளர்ந்து இவர்களையே தன் வலையில் வீழ்த்திப் பழி வாங்கிக் கொள்ளவும் செய்யும்.)

### தில்லியரசின் இந்த கொடுநிலைகளை எவ்வகையில் முறியடிப்பது?

பாசிசக் கொலை வெறிக் கும்பல்கள் எங்கும் எப்பொழுதும் காட்டாட்சியை நடத்தவே செய்வர். அவர்கள் நடத்தும் காட்டாட்சியில் அவ்வப்போது அரசு வன்முறைகளும், கொடுஞ்செயல்களும் தலை விரித்தாடவே செய்யும். இவ்வாறு எழும் அரசு வன்முறைகள் அதிகமாகும் காலங்களில் எல்லாம் மக்கள் தங்களுடைய புரட்சி வன்முறையை (Revolutionary Violence) மேற்கொள்ளவே செய்வார்கள். அப்போது மக்கள் கருவியேந்திப் போராடக் கற்றுக் கொள்வார்கள். அக்கருவியேந்திய போராட்டத்தில் ஆளும் வகுப்பாக (Ruling Class) அமைந்துள்ள பாசிசக் கும்பல்களை அப்பாசிசக் கும்பல்களால் பல வழிகளில் தாக்குண்ட ஏழை உழைக்கும் மக்கள்—பாட்டாளிகள் பழி தீர்த்துக் கொள்வார்கள். அவர்களின் பழிதீர்ப்பு தனிமாந்தர்களுக்குரிய அடித்தால் திருபபியடித்தல் முறையில் நிகழாது.* மாறாக ஆட்சியமைப்பையே — சட்ட அமைப்பையே— தூக்கியெறிந்து அரசியல் அதிகாரத்தைக் கைப் பற்றுவதாகவே அமையும். அத்தகைய கருவியேந்திய மக்கள் போராட்டமே (armed People's Struggle) *பாசிச ஆளும் வகுப்பின் அரசின் கொடுமைச் செயல்களை முறியடிக்கும். பாசிசத்தின் கோரக் கொலை வெறிப் பற்களைப் பிடுங்கியெறியும்.*

### தமிழக விடுதலைக்காக நாம் எவ்வாறு போராட வேண்டும்?

தமிழக மக்களின் தன் தீர்வு உரிமைக்காகவும், தமிழகத்தின் தனி நாட்டுரிமைக்காகவும் அரை நூற்றாண்டுக்கு மேற்பட்ட காலமாகப் பல வழிகளில போராடி வந்துள்ள நாம், நம்மிடையே நடந்துள்ள தவறுகளையும், அவற்றிற்கான அடிப்படைகளையும் களைந்தெறிய வேண்டும்,

தமிழர்களிடையே பொதுவாகத் தம்மைத் திராவிடர்கள் (Dravidians) என்று அழைத்துக் கொள்ளும் போக்கு நெடுநாட்களாகவே இருந்து வருகின்றது. இது ஆங்கில வந்தேறிகள் தமிழர்களுக்குச் சூட்டி விட்டுள்ள பட்டமாகும். (இதுவே தமிழர்களுக்கு மாட்டப்பட்டுள்ள விலங்கும் ஆகும்.) இந்தப் பொய்யான பெயர்ப் பட்டத்தைச் சுமந்து கொண்டுதான் தமிழர்கள் தங்களைத் *திராவிடர்கள்* எனக் கருதிக் கொண்டு திராவிட(ர்) இனவெறிக்கு ஆட்பட்டு அடிமைகளாக வாழ்ந்து வருகின்றனர். இந்தத் திராவிடர் இன்வெறியைக் கைக் கொண்டுதான் தமிழக முதலாளிய வகுப்பும் தனது சுரண்டல் வேட்டையைச் செம்மையாகச் செய்து வருகின்றது. அதனால்தான் தமிழக அரசியல் இயக்கங்கள் யாவும் திராவிட(ர்) இயக்கங்களாகவே இருந்து வருகின்றன.

தமிழர்களிடையே திணிக்கப்பட்ட இந்தத் திராவிட(ர்) மயக்கமானது தமிழக மற்றும் இந்தி(ய)த் தரகு முதலாளிய வகுப்பு மற்றும் பெரு முதலாளிய வகுப்பு ஆகியவற்றின் மிகப் பெரும் சூழ்ச்சிக் கருவியாகவே இருந்து பயன்பட்டு வருகின்றது. இந்தச் சூழ்ச்சிக் கருவியைப் பயன் படுத்தியே அவர்கள் தமிழர்களை ஊட்டறுத்து. உழைப்பை உறிஞ்சித் தங்களுடைய தனியுரிமைகளைக் காத்து வந்துள்ளனர்; வருகின்றனர். இந்த வகுப்புகள் கொண்டுள்ள திராவிட(ர்) மற்றும் இந்திய(ர்) அரசியல் இயக்கங்களால் தமிழக மக்களுக்கு விளைந்துள்ள நன்மைகளைக் காட்டிலும் தீமைகளே அதிகம். இவை யாவும் தமிழர்கள் ஒரு நாட்டினம் (தேசிய இனம்) என்பதை மறைத்தும், அவர்கள் தன் தீர்வு உரிமை கோரத் தகுதியுடையவர்கள் என்பதை அழித்தும் இருட்டடிப்புச் செய்தே வந்துள்ளன,

இந்நிலையில் தமிழகத்தின்—தமிழர்களின் தன் தீர்வு உரிமையைக் கோரும் நாம் திராவிட(ர்) மற்றும் இந்திய(ர்) கொள்கைகளின் உள்ளடக்கம் என்ன என்பதை அறிந்து கொள்ள வேண்டும் ஏனெனில் இவை இரண்டுமே தமிழர்களின் தன் தீர்வு உரிமைக்கு எதிரான இனவெறிக் கொள்கைகளே ஆகும். இவை *வரலாற்று வழிப்பட்ட நாட்டினக் கொள்கைகள் ஆகா*. எனவே இவை உலக அளவிலான நாட்டினங்களுக்குரிய தன் தீர்வு உரிமையை மறுத்து எதிர்க்கும் இனவெறிக் கொள்கைகளாகவே இருந்து வருகின்றன. அதனால்தான் இவை முதலாளிய வகுப்புகளால் கையாளப் படுகின்றன. இதனால் இவை இரண்டும் தமிழர்களுக்குள்ள தன் தீர்வுரிமையை மறுத்து—பல் நாட்டின திராவிட(ர்) மற்றும் இந்திய(ர்)ங்களின் —கூட்டுத் தீர்வுரிமையை (Joint-determination) முன்னிறுத்துகின்றன. இவ்வாறு முன்னிறுத்தும் போது இவர்களுக்குள்ளேயே எழுந்த தனியுரிமைப் போட்டிகள் தமிழகத்தில் உண்மையான ஒரு தமிழ் நாட்டின முதலாளிய இயக்கம் உருவாவதைக் கூடத் தடுத்து விட்டன.

(தொடரும்)

* (ஆளும் வகுப்பைப் பதவியிறக்கம் செய்து அவர்களைப் புரட்சி வன்முறையின் கீழ்-பாட்டாளிய வகுப்பு வல்லாண்மையின் கீழ் பணிய வைத்தலே பாட்டாளியத்தின் பழிதீர்த்தல் ஆகும். இதனால்தான் பாட்டாளியத்தின் போர்த் தந்திரக் கொள்கை *"புரட்சி மக்களைக் கருவியேந்திகளாக்குதலும், பிற்போக்குப் படைகளைக் கருவியற்றோர்களாக்குதலும்"* எனும் தன்மையில் வரித்தெடுக்கப் பட்டுள்ளது.)

# பாவலரேறு இல்லாத பாரதிதாசன் விழாவா?! முதல்வர் பதவி என்ன, முத்தமிழைவிடப் பெரியதா?!!

-பாவலர்-தமிழ்க்கனல்-

"தாழ்ச்சிகளில் இத்தாழ்ச்சி தாழ்வில்லை" என்ற முறையில் ஒப்போலையைக் கலைஞருக்கு வழங்கக் கோரிக்கை விடுத்தும், அமையப் பெற்ற அவர் தம் தமிழக அரசுக்கு, முன் நிற்கும்-செய்றப்படுத்த வேண்டிய அரிய செயல்கள் குறித்தும், இத்தமிழின அரசுக்கு எதிராய் வரவிருக்கும் அரசியல் அச்சுறுத்தல்கள் குறித்தும்-அதனைத் தடுத்து நிறுத்தி, நிலைப்படுத்திடச் செய்ய வேண்டிய காப்பு முயற்சிகள் குறித்தும், நல்ல பல நற்கருத்துகளைத் 'தென்மொழி' 'தமிழ்நிலம்' வாயிலாக—பலவாறாக, 'பல்வேறு நிலைகளில்—பாவலரேறு அவர்கள், எழுதிக் காட்டி உரக்கக் குரல் கொடுத்து வருகின்றார்கள்!

அவ்வாறிருந்தும்—நூறுநாள் விழா நாயகர், கருணாநிதியார், பழைய கருப்பனாகவே காட்சி தந்து கொண்டுள்ளார்கள்.

தொடர்ந்து, இவ்வாட்சிக்கான அறிவுரைகளை, அறவுரைகளாய்த் தென்மொழி வாயிலாகவும், எதிரணித் தாக்குதல் குறித்தும், நடைபெற்றுவரும்—நடைபெறும், அரசியல் செய்திகள் பற்றியெல்லாம் ஆய்ந்து, அரிதாய்ம், தமிழ்நிலம் வாயிலாகவும், எழுதிக்காட்டித் தமது உணர்வு அழுத்தத்தை உலகுக்கு உணர்த்திக் கொண்டுள்ளார்கள்!

இந்த அடிப்படையான தமிழ் உணர்வு—தமிழ் நாட்டுணர்வு—உண்மைத் தமிழறிஞர் தம்மை நேசிக்குமுணர்வு—தமிழின உணர்வு—

மீளவும், இத்தமிழ் மண்ணின், ஆட்சிக் கட்டிலில் அமர்ந்துள்ள கலைஞர், பெருமகனாருக்கு உள்ளதா?—என எண்ணிப் பார்த்தால் மிகுதுயரே மேலோங்கி நிற்கிறது.

அவ்வுணர்வு ஏற்பட்டிருந்தால், இந்நேரம்-பாவலரேறைத் தூக்கிப் பிடித்தும், அரவணைத்து மகிழ்ந்தும், தங்கள் உறவை-அன்பை, இத்தமிழ் கூறும் நல்லுலகிற்குத் தெரியப்படுத்தியிருப்பார்கள்!

அந்நிலையை எதிர்நோக்கியும், அதனால் கிட்டும், நம் செந்தமிழ்மொழிக்கான நிலைத்த செயற்பாடுகளையும், அதன் வழி கிட்டும் பெரும பயன்களையும் எதிர்நோக்கியும், எதிர்பார்த்தும் காத்துக் கொண்டுள்ள என்னைப்போன்ற எத்தனையோ உண்மைத் தமிழ் நெஞ்சங்களெல்லாம் மகிழ்ந்து போயிருக்கும்!

"'பாவாணர்' என்ற தமிழ்க்கடலின் கூர்த்த அறிவும், அரிய மொழிநலக் காப்புப் பணிகளைத்தும், முற்றாக-நம் மொழி நலத்திற்காகப் புரந்து ஏற்றுக் கொள்ளாது போனதால், ஏற்பட்டுள்ள, ஈடு செய்ய வியலாத பேரிழப்பை, இனி எவ்வாறே அல்லது யாராலே ஈடு செய்ய இயலும்? அவர்தம், அரிதிலும் அரிதான-செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் அகர முதலித் திட்டமும், முதலாம் மடல வெளியீட்டுடன் நின்று போயுள்ளதே!..... அப்பெரும், அரும்பணி முடிக்கப்பட வேண்டிய முகாமையான ஒன்றாயிற்றே"...என்ற சிந்தனையெல்லாம்-தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கட்கு ஏற்பட வேண்டாவோ?...அவர் மறப்பினும், அருகிருக்கும் பேராசிரியராவது நினைவுபடுத்த வேண்டாமோ?...

இவ்விருவருக்கும், அவ்வரும் பெரும் பணியை, பாவாணரின் எண்ண ஊற்றுக்கு ஒப்பவும், நந்தம் செந்தமிழ் மொழியின், தொன்மைப் பெருமைக்கு ஏற்பவும், செய்து முடிக்கத் தக்கவர்,—இத் தமிழகத்தின், தன்னேரில்லா, ஒப்பற்ற, ஒரே ஒரு பெரும் புலவரும், இந்நூற்றாண்டுக் கம்ப நாடருமான செந்தமிழ் ஞாயிறு, பைந்தமிழ்ப் பாவலன், பாவலரேறு-பெருஞ்சித்திரனார்' அவர்கள் தாம், என்பது தெரியாதா!...மேலும், பெரும்பேராசான், பாவலரேறு அவர்களின் உள்ளமும் உணர்வும், தொல்லைகளின்றிக் காக்கப் பெறுமென்றால், நந்தம் செந்தமிழ் மொழி மற்றும் இன நலக் காப்பிற்கான, தூய அறிவு நலஞ்சான்ற காப்புப் பணிகள், எத்தனையோ கூறுகளில், வெளிப்போந்து பயன் விளைக்கும் என்பதும் புரியாதா...!

'தெரியவில்லை' — 'புரியவில்லை'—என்றுதான் தோன்றுகிறது. அது மட்டுமன்று, "ஆட்சிக் கட்டிலில் என்றுந்திண்ணமாய் இருப்போம்"—என்ற இறுமாப்பு நெஞ்சில் நிரம்பவிருப்பதாயும் தெரிகிறது.

மீளவும் ஒருமுறை ஆட்சிக் கட்டிலுக்கு வர,கலைஞர் அவர்கள் மிகவும் தொல்லைப் பட்டாக வேண்டும். அவ்வாறான, இறுக்கமான ஆரியச் சூழ்ச்சி

வலை பின்னல் செய்யப்பெற்று அணியமாகவுள்ளது. அதனுள், நற்றம் தமிழினப் பொது மக்களின் அறியாமை அடைபட்டுக் கிடக்கிறது. உடைப்பது மிகக் கடினம்! உட்காருவதும் மிக மிகக் கடினம்!!

இந்நிலையில், கிடைத்தற்கரிதாய்க் கிட்டி யிருக்கும் இவ்வரிய வாய்ப்பைக் கொண்டு, "கொண்ட கொள்கைக்காக ஏதுஞ்செய்ய வேண்டுமே"—என்ற எதிர்பார்ப்பு உணர்வும், தென்மொழி போன்ற இதழ்களையும், அய்யா பாவலரேறு போன்றோரையும், தேடித் தேடிப் பிடித்து, வாட்டம் போக்கி, வேண்டுவன செய்து, அவ்வறிவுச் சுரங்கங்களிலிருந்து தோண்டித் தோண்டிப் பெற வேண்டிய, அறிவு முத்துகளைப் பெற்று—இவ்வின நல்வாழ்விற்காக ஏதுஞ்செய்ய வேண்டுமே"—என்று அறிவுணர்வும் சூழ வினையாற்ற வேண்டிய பெரும் பொறுப்பு கலைஞர் அவர்கட்கு உண்டு.

இதனையெல்லாம் செய்யத் தவறி—ஒரு பொது வான அரசியல் வழக்காடியைப் போல் செயல்பட்டு, முடித்தோ அல்லது முடிந்தோ—அரசு நடத்தும் பொறுப்பிலிருந்து கீழிறங்குங்கால்—எதிர்வரும் வரலாற்று ஆசிரியர்களும், இனவுணர்வுச் சிந்தனையாளர்களும், கலைஞர் அவர்களை திறனாய்வு செய்யும் போதும், பேசும் போதும், எழுதும் போதும், இந்நிலையைச் சுட்டிக் காட்டியே பேசுவர், எழுதுவர், திறனாய்வர் என்பது மட்டும் உண்மை!

கலைஞர் முன்னுள்ள முப்பெரும் பணிகளாகத் தென்மொழியால் சுட்டிக்காட்டப் பெற்றவற்றுள், 'தமிழீழம்' தொடர்பான சிக்கல் 'கைவிட்டுப் போனதாக'க் கலைஞர் கூறியுள்ளதையும், இவ் விடத்தில், ஆழ்ந்தும், கூர்ந்தும், ஓர்ந்தும் சிந்திக்க வேண்டற்பாலதாகும்.

இதனையெல்லாந் தொடர்ந்து கடந்த 'மே' திங்கள்—ஒன்றும் பக்கலன்று, தமிழக அரசுச் சார்பில், பாவேந்தரின் 99-ஆவது பிறந்த நாள் விழா—சென்னை, கலைவாணர் அரங்கில்-நடை பெற்றதாகச் செய்தித்தாள்கள் வழி அறிந்தேன். அவ்விழாவில் உரையாற்றிய கலைஞர் அவர்கள், பாரதிதாசனின் நூற்றாண்டு விழா—அடுத்த ஆண்டு முழுவதுமாகக் கொண்டாடப்படும்"—என்பதாக வும் அறிவிப்புச் செய்திருந்தார்கள்.

செய்திகளை முழுக்கப் படித்த போது, சிரிப்பும் துயரமும் ஒரு சேரக் கவ்வின! ஆம்! எதிர்வரும் நூற்றாண்டு விழா நிகழ்வுகளும் இவ்வாறுதான் இருக்குமோ" எனவெண்ணிக் கவலுற்றேன்.

நஞ்சப்பன் என்பார்—"பாவேந்தர் சமரசப் பாடல்களைப் பாடியதாகக் குறிப்பிட்டிருந்தார். விழாவிற்குச் சிறிதும் பொருந்தா நிலையில், வெங்கடேசுவர தீட்சிதர் என்பார், கருணாநிதி நலமாய் வாழ, அகிலாண்டேசுவரியிடம் முறையீடு செய்திருந்தார்.

தேடித் தேடிப் பார்த்தேன். பாவலரேற்றைக் காணவில்லை! அவரை ஒத்த பெரும் புலவர்களையும் காணவில்லை!!

'பாவலரேறு' இல்லாமல் பாரதிதாசன் விழாவா?! 'முதல்வர் பதவி' என்ன முத்தமிழை விடப் பெரியதா!?!

உணர்வு நெருப்பா, அணையப்போகிறது!
இமயமலையா, நகரப் போகிறது!!
இல்லை; இல்லவே இல்லை; இழப்பு பாவலரேறுக்கு இல்லை; கலைஞர் அவர்கட்குத்தான்; இந்த ஏதுங்கெட்ட மொத்த தமிழினத்துக்குந்தான்! ஆம், மொத்த தமிழகத்துக்குந்தான்!!

கலைஞர் பெருமகனார்—பழைய கருப்பனே கருப்பன் தான்!! ○

# செய்தித்துறையின் கழுத்தை நெரிக்கும் இராசீவ் அரசின் கொடுங்கை!

**(இந்திய செய்தித்தாள்களின் சங்கத் தலைவர் பிரவீண்சந்தர் வி.காந்தியின் கண்டன அறிக்கை!)**

செய்தித்தாள் அச்சிடும் தாளின் (News Print Paper) விலையை அரசு 30 விழுக்காடு உயர்த்தியிருக்கும் நடவடிக்கை ஒருதலைச் சார்பானது. இவ்விலை உயர்வு முன்பு கேட்டிராத ஒன்று.

இது எழுத்துரிமைக்கு விழுந்த பலத்த அடி. அதுவுமன்றி, செய்தித்தாள் தொழிலை இவ்விலையுயர்வு பின்னடையச் செய்யும்.

இதையொட்டி மற்றொரு விலை உயர்வைப் பொதுத் துறையான மைசூர் தாள் ஆலை அறிவித்திருப்பது இன்னும் அதிர்ச்சி தரக்கூடிய செய்தி. கல்லெடைக்கு (டன்னுக்கு) 3000 உருபா அல்லது 30 விழுக்காடு உயர்வு என்பது மிகவும் வருந்தத் தக்கது.

செய்தித்தாள் துறையுடன் முன் கலந்தாய்வு ஏதும் நடை பெறாமல், விலை உயர்வு செய்யப் பட்டுள்ளது. இந்த விலை உயர்வால் தாளிகைகளின் பொருள் நிலை நசிந்து விடும் என்பதையும் தற்போதைய விலையுயர்வு கருத்தில் கொள்ளவில்லை. இதனால் தாளிகைகளின் விலையை உயர்த்த வேண்டிய கட்டாயச் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் தாக்கமுறுகிறவர்கள் பொது மக்களே. தன்னுரிமையான கருத்துக்கும் தாளிகைத் தொழிலுக்கும் விழுந்துள்ள அடியில், தாளிகைகளைக் கட்டுப் படுத்த அரசு எடுத்துள்ள பல நடவடிக்கைகளில் இதுவும் ஒன்றாகும். ○

(முன் இதழ்த் தொடர்ச்சி)

# தி.மு.க.-சனதா தள கூட்டுறவு!

தஞ்சை நலங்கிள்ளி, அமெரிக்கா.

அந்நூலில் காணப்படும் சில உரைகள் (கருணாநிதியின் உரைகள்) கீழ்வருமாறு:

"எப்பொழுதும், நிலையான அமைதி இலங்கையிலே தமிழனுக்கு ஏற்பட வேண்டுமேயானால் தமிழீழம் ஒன்றைத் தவிர வேறு வழி கிடையாது."

"தமிழ் ஈழம் ஒன்றுதான் தமிழர்களைக் காப்பாற்ற வல்லது, தமிழர்களுக்கு அமைதியைத் தர வல்லது."

"தமிழனுடைய குருதி ஓட்டத்திலெல்லாம் இன்றைக்கு ஒன்றிக் கலந்து விட்ட உணர்வாகத் தமிழ் ஈழ உணர்வு அமைந்து விட்டிருக்கிறது."

"தனித் தமிழ் ஈழ நாட்டைப் பெறுவதற்காக நம்மாலான அனைத்து ஈகத்தையும் செய்ய அணியமாக இருப்போம்."

இந்தியப் படைகள் ஈழத்தை விட்டு வெளியேறுவதே ஈழ விடுதலையின் முதற் கட்டமாக அமையும். (இந்திய அரசு எவ்வளவுதான் மூடி மறைத்தாலும், இந்தியப் படைகள் தமிழ்ப் பொது மக்களைக் கொல்வதும், தமிழ்ப்பெண்களைக் கற்பழிப்பதும் உலகறிந்த உண்மை.) இந்தியப் படைகள் வெளியேறிய பின்னர் சிங்களப் படையைத் தோற்கடித்துத் தமிழ் ஈழம் மலரும். இந்தியப் படைகளையும், சிங்களவப் படைகளையும் தோற்கடிக்கும் ஆற்றல் தமிழ் ஈழ விடுதலைப் புலிகட்கு உண்டு. (வியத்நாம்—அமெரிக்கப் போரும் ஆப்கானிய—உருசியப் போரும் தரும் வரலாற்று உண்மையிது. அமெரிக்கப் படையையோ, உருசியப் படையையோ விட இந்தியப் படை வலிமை படைத்ததன்று. வியத்நாமிய வீரருக்கோ, ஆப்கானிய வீரருக்கோ நம் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் சற்றும் குறைந்தவருமல்லர்) சனதா தள-தேசிய முன்னணி ஆட்சியில் இந்தியப் படை தானாகவே வெளியேறுமானால் தமிழ் ஈழ விடுதலை மிக விரைவிலேயே மலரும். இந்தியப் படையின் கீழ் ஈழப் பொது மக்கள் இன்னும் சில ஆண்டுகள் நசுங்குவதும் தவிர்க்கப்படும்.

சனதா தளக் கட்சியின் தலைவர்கள் தமிழ் ஈழ விடுதலையை ஆதரிக்கவில்லை. காலங் காலமாக ஈழத் தமிழ் மக்கள் சிங்களவருக்கு அடிமையாக இருக்க வேண்டுமென்பதே வடஇந்திய சனதா தளக் கட்சியின் கொள்கை. சனதா தளக் கட்சி, தனது ஈழக் கொள்கையை மாற்றி ஈழ விடுதலையை ஆதரிக்கவில்லையென்றால், தி. மு. க. சனதா தளக் கட்சியோடு கொண்டுள்ள கூட்டுறவை அறுத்து விட வேண்டும்.

சுருங்கக் கூறின், சனதா தள—தேசிய முன்னணி தனது தேர்தல் அறிக்கையில் இந்தித் திணிப்புப் பற்றியும், ஈழ விடுதலை பற்றியும் தனது கொள்கையைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப் பட வேண்டியன கீழ்வருமாறு:

1) சனதா தள — தேசிய முன்னணி இந்தியாவின் (தில்லியரசின்) ஆளுங்கட்சியாக வருமானால், ஆட்சிக்கு வந்த மூன்று மாதங்களுக்குள் 'இந்தியே இந்தியாவின் ஆட்சி மொழி' என்ற அரசியல் சட்டத்தை மாற்றி, 'மாநில மொழிகள் பதினைந்தும் இந்தியாவின் ஆட்சி மொழிகள்; இப் பதினைந்து மொழிகளும் இந்தியாவின் ஆட்சி மொழியாக நடைமுறைக்கு வரும் வரையிலும், ஆங்கிலம் இந்தியாவின் ஆட்சி மொழியாக விளங்கும்' என்ற அரசியல் சட்டத்தை இந்திய அரசு (சனதா தள தேசிய முன்னணி அரசு) இந்தியப் பாராளுமன்றத்தில் கொண்டு வரும்.

2) சனதா தள — தேசிய முன்னணி இந்தியாவின் ஆளுங் கட்சியாக வருமேயானால், ஆட்சிக்கு வந்த ஒரு கிழமைக்குள் ஈழத்தில் போர் நிறுத்தம் (cease-fire) அறிவிக்கும். ஆட்சிக்கு வந்த மூன்று மாதங்களுக்குள் இலங்கைத் தீவின் வடக்கு—கிழக்குப் பகுதிகளில் (ஈழத்தில்), "ஈழ மக்கள் இலங்கையின் (சிரீலங்கா) ஒரு மாநிலமாக இருக்க விரும்புகிறார்களா, அல்லது இலங்கையிலிருந்து பிரிந்து தனி நாடு (ஈழம்) அமைத்துக் கொள்ள விரும்புகிறார்களா" என்பதை அறிய ஒரு கருத்தெடுப்பு (வாககெடுப்பு) நடத்தும். பாதிக்கு மேற்பட்ட ஈழ மக்கள் தனி நாடு வேண்டுமென்று கருத்தளிப்பார்களானால், இந்திய அரசு (சனதா தள—தேசிய முன்னணி அரசு) ஈழம் விடுதலை பெற்ற தனி நாடு என உலகுக்கு அறிவித்து விட்டு, ஈழத்தை முழு உரிமை பெற்ற தனி நாடாக ஏற்றுக் கொள்ளும். (குறிப்பு: இந்திய அரசு இப்படியோர் அறிக்கையின் மூலம்தான் வங்காளதேசத்தை (Bangla Desh) ஏற்றுக் கொண்டது. இப்படி இந்திய அரசு அறிவித்த பின் (சிரீ லங்கா அரசு) எதுவும் செய்து விட முடியாது. இந்தியாவுடன் போராடும் ஆற்றல் இலங்கைக்குக் (சிரீ லங்கா) கிடையாது.

ஈழம் குறித்த மேற்கண்ட நடவடிக்கைகளை எடுக்கும் விருப்பம் சனதா தள கட்சிக்கு இல்லையென்றால், அதற்குப் பகரமாகக் கீழ்க் கண்ணும்

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம்)

# ஈழப் போரில் இறுதிக் கட்டம்?’

(‘தினமணி’ படிப்பாளரின் கருத்துரை மீதொரு கருத்து)

1. ‘தினமணி’, இந்தியப் படையும், ஈழப் போராளிகளும் ‘சண்டை’யிட்டுக் கொண்டிருப்பதை ஒப்புக் கொள்வதாக (அதன் ஆசிரியவுரை (31-5-88) ‘ஈழப் போரில் இறுதிக் கூட்டம்’ வந்து விட்டதைத் தன் நோக்கில் கூறுவதன் மூலம்) உள்ளது. இரு தரப்பும் தன்மதிப்புப் (கௌரவம்) பார்ப்பதைத் ‘தினமணி’ கைவிடக் கூறியுள்ளது.

இதனை மறுக்கும் (அல்லி) ராணியின் பார்வையில் கோளாறு உள்ளது. இந்தத் ‘தமிழச்சி’யை நாம் அறியோம். ஆனால், ‘நம் படை’ என்று கூறும் இந்தியப் படை முதலில் மோதவில்லையாம்; புலிகள் தாம் மோதினார்களாம். ‘அமைதி’யை என்ன விலை கொடுத்தும் நிறுவப் போனவர்களுக்குப் ‘போர் புரியும்’ தேவை ஏன் வந்தது? ‘தினமணி’ கூறும் ‘தன்மதிப்பு’தான் காரணமாக இருத்தல் வேண்டும்!

பிரபாகரன் ஈழத்துப் பேச்சும், கடந்த காலத்தில் ஒரே நாளில் அமைதி நாட்டித் திரும்புவோம் என ‘அறைகூவல்’ விட்ட அரசின் தவறான போக்கும் பற்றி, இந்தப் படிப்பாளி’ அறிந்திருக்க ஞாயமில்லை.

தேர்தலை ‘நமது’ இந்தியாவில் அசாமில் நடத்திய அழகும், அதற்குத் துணை போன இ. பொ. க.வின் இரு பிரிவுக் கட்சிகளும் இந்த ‘அல்லிராணி’யின் கருத்தைத் தான் தூக்கிப் பிடிக்கின்றன. சவங்கள் அழுகும்; உயிர்ப்பதில்லை. அவற்றில் நெளியும் புழுக்களை ‘உயிரோட்டம்’ என்பார்களோ?

2. திரு. வில்லிபுத்தூர் பா. தனபால், ‘எடுபிடி’-யின் கருத்துகளையே கொண்டிருக்கிறார்.

போராளிகள் போர்க் கருவிகளைப் பெருமளவில் வைத்திருந்ததாலேயே ‘பேச்சுரைகளைப்’ போக்குக் காட்டிப் போராளிகள் மறுத்து வந்ததாகக் கூறுகிறார். ‘விடுதலை’யை மறுக்கும், போர்ப் பண்பற்ற ஈசல் பிறவிகள் கூட இந்தியா ‘வல்லமை’யற்ற படை கொண்டது என ஒப்புக் கொள்ள மாட்டார்கள். யானையை, முதலை வெல்லக் காரணம், நீரில் கிடக்கும் முதலைக்கு வலிமை அதிகம் என்பதே. மக்கள் வெள்ளத்தில் வாழும் போராளிகளை எத்தனை, வலிமை கொண்ட படையாலும் ஒடுக்க முடியாதென்பதே ‘போர் நெறிமுறை’யாகும்!

3. செ. யோகநாதன்—சென்னை-48. இந்த ஈழப் படைப்பாளி-கதை - எழுத்தாளர், ‘எதிர்பார்ப்பு’ ஞாயமானது. 13-ஆவது அரசியல் சட்டத்திருத்தம் ஓர் ஏமாற்று நாடகம், செயவர்த்தனே அரசின் உரிமைப் பறிப்பு நடவடிக்கை—‘இந்திய வரலாறு’ மாசுபடக் கூடாதென்ற நல்லெண்ணம் ஆகிய கருத்துரைகளுடன் உள்ளது.

4. ஆர். இராசேந்திரன் நாகியம்பட்டியின் ‘நல்லெண்ணம்’ முத்தரப்பும் பேச்சுரையில் முடிவு காண வேண்டும் என்பதாகும்.

அரசுகள் தங்கள் நலன்களையே முன் வைக்கின்றன. நாம் மக்கள் நலனை-மக்கள் நலஞ்சார்ந்த அரசுக்குரிய கருத்துகளை எடுத்து வைத்தாலே, தவறுகளைத் திருத்திக் கொள்ள உதவியவர்கள் ஆவோம். அதனை, இந்த நல்லெண்ண நாயகர் உணர்தல் வேண்டும்!

5. சி. காந்தி, பாப்பா நாட்டுக்காரர், ‘பிரபாகரன்’ மீது வைக்கும் ‘திறனாய்வு’ காலம் கடந்தது. இங்கே, பிரபாகரன்-சபாரத்தினம்-முகுந்தன், பத்மநாபன் போன்றவரும், அமிர்தலிங்கம் போன்றவரும் ‘இந்திய அரசின்’ உதவியை நாடியது, குரங்கிடம் பூனைகள் பங்கு போடக் கேட்ட கதைதான். விடுதலையின் மெய்ப் பொருளை நம் வரலாற்றிலிருந்து தமிழர்களாகிய நாம் இனி மேல்தான் கற்க வேண்டியவர்களாக உள்ளோம்.

ஆங்கிலேயரிடம் ‘இந்திய விடுதலைக்காகப்’ போராடிய நமக்குள்ளிருந்த ‘தந்நலக் குழுக்கள்’ கொண்ட ‘உறவுகள்’ பற்றி நாம் மீளாய்வு செய்தால் நல்லது- படிக்க வேண்டியவை ஏராளம். இந்தக் ‘காந்தி’ கொஞ்சம் எண்ணிப் பார்க்கட்டும்.

6. அ. இராயப்பன், வேலூர்-கூறுகிறபடி பிரபாகரன் கருவிகளை ஒப்படைத்து விடலாம். ‘எதிரி’கள், ‘காந்தி சேனை’யாக இருந்தால். கைநூலும் கொல்லாமையும் கை நழுவிப் போய் ‘பல காலம் போனதே’’

நமது சங்கரலிங்கனார்’ செத்த பிறகும், ‘திலீபன்’ உண்ணாநோன்பை மேற்கொண்டதை ‘இராயப்பன்’, மறுபடி ‘பிரபாகரன்’ ஏற்க வேண்டும் என்கிறாரா? வரலாறு திரும்பாது; அது மேலும் வளர்ந்து முன்னேறவல்லது—இங்கே, ஏமாளிகள் நாம் ஆகலாம். எந்தப் போராளியும் அந்தப் பெயர் வாங்க மனம் ஒப்பான்!

7. மு. சிவகுருநாதன், அண்ணாபேட்டை கூறுகிறபடி, ‘தெரியாமல் சுடப்பட்டு விட்டார் பிரபாகரன்’ என்று கூறி நழுவிக் கொள்ள ‘முயல்பவர்கள்’ உண்மையில்’ ‘அமைதி நாடி’களாக முடியாது.

8. க. குமரவேல் — சிதம்பரம் கூறுகிறபடி பிரபாகரன் உயிர்க்கு ஊறெனில் உலகம் ஒப்பாது. ‘விடுதலை வரலாற்றில்’ பழி ஏற்கக் கூடியவர்கள் எதிர்காலத்தில் அக்கறை அற்றவர்களே.

—பறம்பை அறிவன்.

Scanned with CamScanner

# கூடங்குளம்-அணுவுலை மின்சாரம்-சிக்கல்கள் தீர்வுகள்!

ஆசுத்திரியாவில் வியன்னாவைத் தலைமையகமாகக் கொண்ட அனைத்துத்தேச அணுவிசை முகவர்களின் துணை இயக்குநராக உள்ள போரிசு ஏ. செமெனுவ், முன்னர் உருசிய அணுவிசை நடுவத்தின் துணைத் தலைவராக இருந்தவர். அவர் கூறுவது,

செர்னோபில் அணுமின் நிலைய ஏதம் 1986 ஏப்ரல் 26-ஆம் நாள் நேரிட்டது. உருசிய அரசு வெளியிட்ட விளத்தங்களின்படி மாண்டவர் 31; காயமடைந்தவர் ஏ. தா. 300 பேர்.

இந்த ஏதம் (விபத்து) குறிப்பான படிப்பினைகளைத் தந்துள்ளது. 1986-இல் தொடங்கிய உருசியாவின் ஐந்தாண்டுத் திட்டத்தில் அணு ஆற்றலைப் பயன்படுத்தி மின்சாரம் விளைவு செய்ய 1990 க்குள் 42000 மெகாவாட் அதிகரித்துவிட இலக்கு குறிக்கப்பட்டது. இந்த இலக்கை எட்ட முடியாது. 42000 மெ.வா அதிகரிப்பில் 28000 மெ.-வா. அதிகரிப்பு ஏற்படப் போவதில்லை.

என்றாலும் 2000 ஆண்டில் 100000 மெ. வா. அளவை எட்ட இன்னமும் இலக்கு வைத்துள்ளது.

இப்போது உருசியாவில் அணு ஆற்றலால் மின்சாரம் உருவாக்கத் திறன் 33,600 மெ.வா. மட்டுமே ஆகும்.

இப்போது, கூடுதல் பாதுகாப்பு, அணு உலை இயக்கும் ஊழியர்களை உளஇயல் ஆய்வு செய்தல் ஏற்பாட்டை உருசியா மேற்கொண்டுள்ளது. இதற்குச் செர்னோபில் ஏதம்தான் காரணம்.

செர்னோபில் அணுமின் நிலையத்தில் இருந்த நான்கு. 1500 மெ. வா. அணு உலைகளில் ஒன்று ஏதம் ஆனது. காரணம் சரியான முறையில் திட்டமிடாமல் ஆய்வு நடத்தியது ஊழியரின் மெத்தனச் செயல்.

சான்று:—தினமணி 28-4-89

—பறம்பை அறிவன்—

---

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசுப் பணியாளர்களான இராவணன், குணத்தொகையன், ந. முத்துக்குமரன் ஆகிய மூவரும் தற்காலிகப் பணி நிறுத்தத்தில் உள்ளனர் எனபதும் குறிப்பிடத் தக்கது. குண்டலகேசி, பவணந்தி, தமிழ் இனியன், முகிலன், சுகுமாறன் ஆகிய ஐவரும் மாணவர்கள் ஆவர்.

பிற செய்திகள் பின்னர் வரும்.

—நம் செய்தியாளர்

(9-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொள்கையை சனதா தள—தேசிய முன்னணி தேர்தல் அறிக்கையில் குறிப்பிட வேண்டும்.

சனதா தள—தேசிய முன்னணி இந்தியாவின் ஆளுங்கட்சியாக வருமானல், ஆட்சிக்கு வந்த ஒரு கிழமைக்குள் ஈழத்தில் போர் நிறுத்தம் (cease-fire) அறிவிக்கும். ஆட்சிக்கு வந்த மூன்று மாதங்களுக்குள் இலங்கைத் தீவின் வடக்கு—கிழக்குப் பகுதிகளில் (ஈழத்தில்), "இந்தியப் படைகள் ஈழத்தை விட்டு உடனடியாக வெளியேற வேண்டுமா, வேண்டாமா?" "வெளியேறுவதென்றால் இந்தியப் படைகள் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளிடமிருந்து பறித்த போர்க் கருவிகளை (weapons) விடுதலைப் புலிகளிடம் திரும்பக் கொடுக்க வேண்டுமா, வேண்டாமா?" என்ற இரு கேள்விகளையும் ஈழ மக்கள் முன் வைத்து ஒரு கருத்தெடுப்பு (வாக்கெடுப்பு) நடத்தும். பாதிக்கு மேற்பட்ட ஈழ மக்கள் இந்தியப் படை ஈழத்தை விட்டு வெளியேற வேண்டுமென்று கருத்தளிப்பார்களானல், கருத்தெடுப்பு நடந்த மூன்று மாதங்களுக்குள் இந்தியப் படை ஈழத்தை விட்டு வெளியேறும். பாதிக்கு மேற்பட்ட ஈழ மக்கள் போர்க் கருவிகளை விடுதலைப் புலிகளிடம் திரும்பக் கொடுக்க வேண்டுமென்று கருத்தளிப்பார்களானல், இந்தியப் படை தான் விடுதலைப் புலிகளிடமிருந்து பறித்த போர்க் கருவிகளையெல்லாம் (அல்லது, இதற்கு இணையான போர்க் கருவிகளை) விடுதலைப் புலிகளிடம் திரும்பக் கொடுக்கும். (குறிப்பு: இப்படி ஈழ மக்களின் விருப்பத்தை அறிந்து அதன்படி நடந்து கொள்ள விருப்பமில்லாவிட்டால், இந்தியப் படைக்கு ஈழத்திலென்ன வேலை? உடனடியாக, ஈழத்தை விட்டு இந்தியப் படைகள் வெளியேற வேண்டும்)

மேற்கண்ட இரு கொள்கைகளும் (1-ஆம், 2-ஆம் அல்லது 1-ஆம், 3-ஆம்) சனதா தள தேசிய முன்னணியின் தேர்தல் அறிக்கையில் இடம் பெறு விட்டால் தி.மு.க. சனதா தள கட்சியுடன் கூட்டுச் சேரலாகாது. இக் கட்டுரையின் முற்பகுதியில் நாம் குறிப்பிட்ட அண்ணாதுரையின் கூற்றை (1966 இல், தி. மு. க. நானகாம் பொது மாநாட்டில் பேசியது) இன்றைய தி.மு.க. தலைவர்களும், உறுப்பினரும் மறந்து விடலாகாது'

(பின்குறிப்பு; இக்கட்டுரையாசிரியர் எந்த அரசியல் கட்சியையும் சேர்ந்தவரல்லர். எல்லாத் தமிழ்க் கட்சிகளையும் தமது கட்சியாகவே கருதுகிறார்.) O

---

**அன்பர்கள் கவனிக்க!**

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும் கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

Scanned with CamScanner

கொடைக்கானல் சார்ந்த சிறு சிறு நிகழ்வுகளின் மூலம் குடமுருட்டி குண்டு வெடிப்பு முதல் கொடைக்கானல் குண்டு வெடிப்பு வரை வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழகத்தைப் பொறுத்த அளவில் கருத்துப்போர் செய்வோர் வெறுமனே கருத்துப் போரோடு நின்று விடுவதும், கருவிப்போர் செய்வோர் வெறும் கருவிப் போரோடு நின்றுவிடுவதுமான நிலையே உள்ளது. மேலும் இந்த இரண்டு பிரிவினரின் வளர்ச்சி என்பது நேரெதிரான வளர்ச்சியாக அமைந்துள்ளது. இதனை மாற்றிக் கருத்துப்போர் செய்வோரையும், கருவிப்போர் செய்வோரையும் ஒருவர்க்கொருவர் இணையானவர்களாக மாற்றினாலொழிய தமிழ் மக்கள் விடுதலைப் புரட்சிக்கான வளர்ச்சியை நாம் அடைய முடியாது.

எனவே, இப்புரட்சியின் பங்காகக் கருத்துப்போர் செய்வோரானாலும் சரி, கருவிப்போர் செய்வோரானாலும் சரி ஒவ்வொருவரும் தங்களுக்குள்ளான புரிதல் உணர்வோடு தங்களுக்கான பணியைத் தொடர்ந்து செய்வோமானால் இத்தமிழ்நாடு விடுதலை பெறும். தமிழ் மக்கள் விடுதலை பெறுவர். வெல்க தமிழ் மக்கள் விடுதலைப் புரட்சி! —மாணிக்கம், புதுச்சேரி.

## நன்று! நனிநன்று!

அன்பு ஐயா!

வணக்கம். இதழ் எண் 123 தலைப்புச் செய்தி அருமையாக உள்ளது. திரு. மா. பொழிலன் மடல் இல்லாதது குறையாக உள்ளது. வெங்காலூர்ச் செய்திகள் உள்ளத்தைக் குளிரச் செய்கின்றன. இந்த இதழ் பன்னிரெண்டு பக்கமும் அருமை.

அன்பு ஐயா, இதழ் எண் 124-இன்று நடுப்பகலில் என் கைக்குக் கிட்டியது. முதற்பக்கம் தலைப்புச் செய்தி, வெளு வெளு என்று வெளுத்து வாங்கி விட்டீர்கள். வெகு அருமை, எத்தனை முறை படித்தாலும் சலிக்கவில்லை; நன்று; நனிநன்று. கூடங்குளம் அணுமின் உலையினால் வரும் கேடுகளை இன்னும் எழுதுங்கள். அணுமின் நிலையத்தை எதிர்த்து மக்களைத் திரட்டவேண்டும். நம் மக்கள் தூங்கு மூஞ்சிகள். இவர்களை எழுப்ப இயலாது. திரு. மா. பொழிலன் மடல் இனிமையே இனிமை.

பன்னிரெண்டு பக்கமும் விலை மதிக்கமுடியாதவை வெல்க! தமிழ்நிலம்!

—நா. அழகப்பத்தமிழன், சிவசைலம்

## நம்பூதிரித்தனமாகவே ..!

அன்புள்ள ஐயா,

"தமிழ்நிலம்' தொடர்ந்து படித்து வருகிறேன். 124-ஆவது இதழில் வெட்கங்கெட்ட இராசீவ் வீரங்கெட்ட அமைதிப்படை, மானங்கெட்ட வரதராசப்பெருமாள்' முதற்பக்கக் கட்டுரை சரியான சாட்டை அடி! பொழிலனின் மடல்கள் நெஞ்சை நெக்குருகச் செய்கின்றன.' குடமுருட்டியிலிருந்து கொடைக்கானல் வரை' அமுதனின் கட்டுரைத் தொடர் தமிழக விடுதலையாளர்களை இந்திய மயமாக்க முயலும் புதிய நம்பூதிரித்தனமாகவே படுகிறது. 'தி.மு.க. சனதாதளக் கூட்டு பற்றி நலங்கிள்ளி நன்றாகவே ஆய்ந்துள்ளார்.

அன்புள்ள —அரு. கோபாலன், சென்னை-94

---

(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண். 124;

நூல் அஞ்சல்

பெறுநர்: திரு. / திருவாட்டி

அனுப்புதல்:
**தமிழ்நிலம்**
5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5
தொலைபேசி எண்: 847829

உறுப்பினர்!
தனி இதழ் விலை உரு. 1-00
ஆண்டுக் கட்டணம் உரு. 50-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 25-00

த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்!
1) தாய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்,
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பிச்சல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

இந்தியாவுக்கு · 4-2

...க்களுக்குத் தெரியவேண்டிய உண்மைகளை மறைக்கின்ற அரசு மக்கள் நலத்தைக் கருத முடியாது!

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார். அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.

TN/MS (C) 637